தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை அங்கக வேளாண் ஆராய்ச்சிக்கு தேசிய விருது

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளங்குன்றா அங்கக வேளாண்மைத் துறைக்கு 2015-16 ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த அங்கக வேளாண் ஆராய்ச்சிக்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதானது அங்கக முறையில் காய்கறி, தானிய, எண்ணெய் வித்துப்பயிர்கள் உற்பத்தியில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள், ஆராய்ச்சி வெளியீடுகள், அங்கக நெல் இரகங்கள் கண்டறிதல், மலைவாழ் மக்கள் மேம்பாடு அங்கக விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி, அங்கக இடுபொருட்கள் திறனாய்வு ஆகியவற்றிற்காக இத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொண்ட இந்திய அளவிலான இருபது பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்குள் 2015-16 ம் ஆண்டிற்கான சிறந்த அங்கக ஆராய்ச்சி மையமாக தேர்வு செய்யப்பட்டு உத்திரப் பிரதேசத்தில் உள்ள மோடிபுரத்தை தலைமையிடமாகக் கொண்ட இந்திய வேளாண் தேசிய ஆராய்ச்சி குழுமத்தின் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்ட மையத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதினை வளங்குன்றா அங்கக வேளாண்மை துறைத்தலைவர் முனைவர். ஏ. சோமசுந்தரம் தலைமையிலான ஆராய்ச்சிக் குழுவானது கடந்த 19.08.2016 அன்று மத்திய பிரதேசத்தின் போபாலிலுள்ள மத்திய மண்ணறிவியல் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற 11வது ஆண்டு ஆராய்ச்சிக் குழு கலந்தாய்வில் ஜோத்பூர், இராஜஸ்தான் வேளாண்மை பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் பால்ராஜ் சிங் அவர்களால், புதுதில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழும துணை பொது இயக்குநர் முனைவர். எஸ் பாஸ்கர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழு தேசிய ஒருங்கிணைந்த பண்ணை திட்ட இயக்குநர் முனைவர் ஏ.எஸ். பன்வர் ஆகியோரது முன்னிலையில் வழங்கப்பட்டது.

விருது பெற்ற வளங்குன்றா அங்கக வேளாண்மைத் துறை ஆராய்ச்சியாளர்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. இராமசாமி மற்றும் அறிவியலார்கள் பாராட்டினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்